Koviloor Digital Library

உ

சரஸ்வதி கவசம்
சகலகலாவல்லி மாலை



Acc.No: 44570
@25

22.02.2024 வியாழக்கிழமை

மகாகும்பாபிஷேக வெளியீடு

Koviloor Digital Library

Koviloor Digital Library

3/4

உ

சிவ சிவ

திருச்சிற்றம்பலம்

சரஸ்வதி கவசம்
சகலகலாவல்லி மாலை

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44570



22.02.2024 வியாழக்கிழமை

மகாகும்பாபிஷேக வெளியீடு

Koviloor Digital Library

முன்னுரை

நகரத்தார் பெருமக்கள் தங்கள் வாழ்விடங்களாக ஏற்றுக்கொண்ட பல ஊர்களில் வேந்தன்பட்டி என்பதும் ஒன்றாகும். இந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டத்தில் வரலாற்றுப் பெருமை கொண்ட பொன்னமராவதிக்குத் தெற்கில் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. 1900ம் வாக்கில் வேந்தன்பட்டியில் குடியேறிய நகரத்தார் பெருமக்கள் காடுவெட்டிப் போட்டு, கடிய நிலம் திருத்தி வீடு கட்டிக்கொள்ள ஆரம்பித்தார்கள். அப்படிப்பட்ட அவர்களுடைய **ஊரில் மீனாட்சியம்மன் சமேத ஸ்ரீசொக்கலிங்கேசுவர பெருமானுக்கு** ஓர் அழகான சிவாலயமும், அதற்கு முன்புறம் ஒரு திருக்குளமும் ஏற்படுத்தினார்கள். இந்தக் கோயிலுக்கு அதிகார நந்தி தேவை என்பதால் புதிதாக நந்தி எம்பெருமானை உருவாக்குவதைக் காட்டிலும் அருகாமையில் உள்ள பழைய நந்திகளைத் தேடினார்கள்.

Koviloor Digital Library

கொடும்பாளூர் மிகப் பழைய ஊர். இந்த ஊரில் உள்ள மூவர் கோயில் மிகவும் சிறப்புடையது. அங்கு சென்ற நகரத்தார் பெருமக்கள், அங்கு ஒரு மிகப்பெரிய நந்தி ஒன்று வழிபாடு இல்லாமல் இருப்பது கண்டு, அதை வேந்தன்பட்டிக்குப் பாரவண்டியில் ஏற்றி கொண்டு வந்து, அதை அதிகார நந்தியாக நிறுவி வழிபாடு செய்ய ஆரம்பித்தார்கள். அதுமுதற்கொண்டு, அவர் நெய்நந்தி என்று பெயர் தாங்கி, இங்கு வருபவர்களுக்கு அருள்பாலித்து வருகிறார். இத்திருக்கோயிலில் சரஸ்வதிக்கு சந்நிதி இல்லை என்பது ஒரு குறையாக இருந்தது. ஆகவே, இந்த கும்பாபிஷேகத்தின் போது, சரஸ்வதிக்கு என்று தனியாக ஒரு சந்நிதி ஏற்படுத்தலாம் என்று முடிவெடுத்து, அதன்படி, இளையாத்தங்குடி ஒக்கூர் பிரிவு தெய்வத்திரு **லெ.முத்துக்கருப்பன் செட்டியார் மற்றும் திருமதி.ஞானசௌந்தரி ஆச்சி** அவர்களுடைய உபயமாக ஞான சரஸ்வதிக்கு புதிய கரங்கள் திருமேனி அமைத்து தனி சந்நிதி இத்திருக்கோயிலில் ஏற்படுத்தப் -பட்டுள்ளது. கலைமகளை வழிபட்டால் எல்லா

Koviloor Digital Library

நலனும் கிடைக்கும் என்பது கண்கூடு. ஆகவே, கலைமகளுக்கு சந்நிதி நிறுவுகின்ற இந்த வேளையில், குமரகுருபரருடைய **சகலகலாவல்லி மாலை, சரஸ்வதி கவசம்** என்னும் சிறிய நூல் குழந்தைகள் படித்து பாராயணம் செய்வதற்காக அந்த குடும்பத்தினரால் 22.02.2024 அன்று நடைபெறுகின்ற, மகாகும்பாபிஷேகத்தன்று அச்சிட்டு வழங்கப்படுகிறது.

இந்நூலைத் தொகுத்தளித்த, அறநிலையத்துறை மேனாள் உதவி ஆணையர், **திரு. அழ.முத்துப்-பழனியப்பன்** அவர்களுக்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்டுத் தந்த, கோவை **சௌமி அச்சகத்தாருக்கும்** எங்களின் அன்பு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வேந்தன்பட்டி,
22.02.2024



இவ்வண்ணம்,
லெ.மு. குடும்பத்தார்

Koviloor Digital Library

இறைப்பணியில்

1. லெ.மு. லெட்சுமணன் முருகப்பன்
2. மு. நாகம்மை ஆச்சி

1. லெ.மு. சுப்பரமணியன்
2. சுப. விஜயலட்சுமி ஆச்சி

1. லெ.மு. பழனியப்பன்
2. பழ. விசாலாட்சி ஆச்சி

1. லெ.மு.ஆறுமுகன் M.A.,
2. ஆறு. அன்பு ஆறுமுகன்

1. ER.மு. முத்துலெட்சுமணன் B.E.,
2. மு. சண்முகநாதன் B.Com., M.B.A.,

1. ER.சுப. கமலக்கண்ணன் B.E.,
2. சிவநந்தினி, ராஜா பழனியப்பன் B.E., M.B.A.,

1. PL. அழகு தமிழ்ச்செல்வி M.E.,
2. PL. முத்துமீனாட்சி M.Com., CA.,

1. ஆறு. அழகுதேவி ஆறுமுகன், M.B.B.S.,
அரசு மருத்துவமனை, திண்டுக்கல்

Koviloor Digital Library

உ

விநாயகர் வழிபாடு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

சரஸ்வதி கவசம்

கல்வியை வழங்கும் கலைமகள் நீயே
கற்றவர் போற்றும் எங்களின் தாயே
எண்ணாய் எழுத்தாய் இருப்பவள் நீயே
எல்லை இல்லா அழகுடை யாளே. 1

வெள்ளைத் தாமரை வீற்றிருப் பவளே
வீணை கையில் வைத்திருப் பவளே
கள்ளவர் எவரும் கவர்ந்திட முடியா
அறிவுச் செல்வம் அளிப்பவள் நீயே. 2

மனஇருள் நீக்கும் மகத்துவம் நீயே
மண்ணும் விண்ணும் போற்றும் தாயே
அறிவொளி பரப்பும் அன்னையும் நீயே
அகிலம் தழைக்க செய்திடு வாயே. 3

கரங்கள் நான்கு உடையவள் நீயே
ஏடும் ஜெப மாலையும் கொண்டு
அருளை வழங்கும் அம்பிகை நீயே
அபயம் தருவாய் சரஸ்வதி தாயே. 4

அமைதியின் வடிவாய் இருப்பவள் நீயே
அடக்கம் பொறுமை கொடுப்பவள் நீயே
இமையென எம்மை காப்பவள் நீயே
எல்லாம் அறிந்த தேவியும் நீயே. 5

நான்முகன் பிரமன் நாயகி நீயே
நலமுடன் வளமும் தருபவள் நீயே
வேண்டிய வரங்களை வழங்கிடும் தாயே
வெற்றிகள் வாழ்வில் நீதரு வாயே. 6

நாவினில் நர்த்தனம் புரிபவள் நீயே
நல்லிகை யாக ஒளிப்பவள் நீயே

Koviloor Digital Library

தேவியர் மூவரில் இருப்பவள் நீயே
தெள்ளிய ஞானம் தருபவள் நீயே. 7

பாமரன் தன்னை பண்டித னாக்கும்
வித்யா வதியே கலகலா வல்லி
நாமம் சொல்லி நாளும் பணிய
நல்லருள் நீயே புரிந்திடு வாயே. 8

கூத்த னூரில் கொலுவிருப் பவளே
கோரிக்கை விரைந்து ஏற்பவன் நீயே
மாற்றம் வாழ்வில் தருபவள் நீயே
மலரடி பணிவோம் அருளிடு தாயே. (கூத்த..) 9

அம்பாள் புரிஎனும் அழகிய நாமம்
உடையது உந்தன் திருத்தல மாகும்
ஹரிநா கேஸ்வரம் என்றொரு பெயரும்
உந்தன் ஆலய மற்றொரு பெயரே. 10

உன்னருள் பெற்ற ஒத்தக் கூத்தனை
அரசவை புலவனாய் அமர்த்தி மகிழ்ந்த
இரண்டாம் ராஜ ராஜன் மன்னன்
ஆலயம் தன்னை அளித்தான் பரிசாய். 11

கூத்தன் தனக்கு பரிசாய் கிடைத்த
காரணத் தாலே இந்த ஊருக்கு
ஏற்றம் கொடுக்கும் இப்பெயர் நிலைத்து
இதயம் குளிரச் செய்வது நிஜமே. 12

கம்பருக் காக நேரில் வந்து
கவலை நீக்கிய தாயும் நீயே
பிறகும் போதே பேசா திருந்த
பக்தருக் கருளிய தேவியும் நீயே. 13

உந்தன் திருவாய் தனிலே ஊறிய
தாம்பூல எச்சிலை உன்னடி யாராம்
புருஷோத் தமனின் வாயில் இட்டு
பண்டித னாக மாற்றிய தாயே. 14

தேர்வுகள் எழுதும் மாணவ மாணவியர்
தத்தம் எழுதுகோலை உன்னடி வைத்து
வேண்டுதல் செய்து வணங்கும் போது
வெற்றிகள் காண செய்பவள் நீயே. (தேர்வு.) 15

பௌர்ணமி நாளில் அன்னை உனக்கு
தேனாபி ஷேகம் செய்திடு வோமே

Koviloor Digital Library

உன்னை நினைத்து மோதிர விரலால்
நாவினில் வைக்க அறிவே பெருகும். 16

ஞானத்தின் உருவாய் நீயிங்கு உறைவதை
குறிக்கும் வகையில் ஐந்து எண்ணிக்கையில்
விமானக் கலசம் இருப்பது சிறப்பு
உன்னருள் இருந்தால் வருமே மதிப்பு. 17

தமிழகம் தனிலே தனியொரு கோயில்
உனக்கென உண்டு உலகோர் தொழவே
அமிழ்தாய் இனிக்கும் அருந்தமி ழாலே
அம்மா உன்னை வணங்கிடு வோமே. 18

நலம்தரும் நவராத் திரியில் உன்னை
நாடே மகிழ்ந்து வணங்கிடும் தாயே
குலம்செழித் திடவே குறைவில் லாமல்
கொடுப்பாய் நீயே கூரிய அறிவை. (நலம் ...) 19

வாகீஸ் வரியே வருக வருக
வாழ்வில் நீயே மங்கலம் தருக
சித்ரேஸ் வரியே சீக்கிரம் வருக
செய்யும் தொழிலில் உயர்வை தருக. 20

துலஜா தேவி துரிதமாய் வருக
துணையாய் இருந்து நல்லருள் புரிக
கீர்த்தீஸ் வரியே கேட்டதை தருக
கேள்வி ஞானம் பெருகிட செய்க. 21

கடசரஸ் வதியே கடாட்சம் தருக
நீல சரஸ்வதியே நிதானம் தருக
கிளிசரஸ் வதியே கேட்டதை தருக
அந்தரிட்ச சரஸ்வதி அருளே புரிக. 22

அறிவுக் கண்ணை திறப்பவள் வருக
அமைதி தவழும் முகத்தவள் தருக
எதிரியை வீழ்த்தும் ஆற்றல் தருக
இணைக்கை யில்லாத தேவி வருக. 23

படிக்கும் புத்தகம் உன்திரு வடியில்
வைத்தே நாங்கள் வணங்கிடு வோமே
மஞ்சள் குங்குமம் திலகம் இட்டு
நெஞ்சம் உருகிட வேண்டிடு வோமே. 24

கோலம் போட்டு திருவிளக் கேற்றி
கோகில வாணி உன்னை பணிவோம்

Koviloor Digital Library

காலம் அறிந்து கருத்தினை உணர்ந்து
கருணை காட்டிட நாங்கள் மகிழ்வோம். 25

ஏழாம் நாளில் எழிலவள் வருக
எட்டாம் நாளில் இறைவி வருக
ஒன்பதாம் நாளில் நீயே வருக
உலகோர் மகிழ உன்னருள் தருக. 26

இல்லம் தோறும் கொலுவைப் போமே
இன்னிசைப் பாடி மகிழ்ந்திடு வோமே
சின்னக் குழந்தைகள் பலரும் வரவே
அன்னம் சுண்டல் அன்பாய் தருவோம். 27

ஒவ்வொரு நாளும் பூஜைகள் செய்து
தேவியர் மூவரை வணங்கிடு வோமே
திவ்ய தரிசனம் அனைவரும் காண
தீபம் ஏற்றி வழிபடு வோமே. 28

வித விதமாக நிவேதனம் செய்து
மூன்று சக்தியை போற்றிடு வோமே
துர்கா லக்ஷ்மி சரஸ்வதி என்று
தொழுதிடு வோமே துயர்விடுப் போமே. 29

Koviloor Digital Library

கல்வியி னாலே செல்வம் பெறலாம்
செல்வத் தினாலே வீரம் பெறலாம்
வீரத்தி னாலே வெற்றியும் பெறலாம். 30

வாழும் மனிதன் படிப்படி யாக
வாழ்வில் உயர உன்பதம் பணிவான்
ஓரறி வான செடிகொடி தாவரம்
ஒண்ணாம் படியில் இடம்பெற் றிடுமே. 31

ஈரறி வான நத்தை சங்கு
இரண்டாம் படியை அலங்கரித் திடுமே
மூவறி வான கரையான் எறும்பு
மூன்றாம் படியில் முகம்காட் டிடுமே. 32

நாலறி வான நண்டும் வண்டும்
நான்காம் படியில் இருந்திடக் காண்போம்
ஐந்தறி வான கால்நடை யாவும்
ஐந்தாம் படியில் அமர்த்திவைப் போமே. 33

ஆறறி வான மனிதர்கள் உருவை
ஆறாம் படியில் வைத்திடு வோமே
ஏழாம் படியில் முனிகளும் ரிஷிகளும்
இடம்பெற் றிடுவார் என்பதை அறிவோம். 34

Koviloor Digital Library

எட்டாம் படியில் தேவர்கள் உருவில்
பொம்மைகள் வைத்து வணங்கிடு வோமே
ஒன்பதாம் படியில் தெய்வ சொரூபம்
சிறப்புடன் வைத்து வழிபடு வோமே. 35

நித்தம் உந்தன் நிழலே காக்க
நினைத்திருப் போரை நின்னருள் காக்க
புத்தக வடிவே புகழினை காக்க
பொன்னும் பொருளும் வழங்கியே காக்க. 36

அன்னத்தின் மீது அமர்ந்தே காக்க
அம்ச வல்லியே எங்களை காக்க
எண்ணம் முழுதும் நீயே காக்க
ஏழ்மை விரட்டி என்றும் காக்க. 37

ஞான சரஸ்வதி தாயே காக்க
நல்லருள் நீயும் புரிந்தே காக்க
கான சரஸ்வதி கல்யாணி காக்க
கைதொழு வோரை கலைவாணி காக்க. 38

வெண்பட் டாடை தரித்தவள் காக்க
வேதம் நான்கும் அறிந்தவள் காக்க

எண்திசை வணங்கும் தேவி காக்க
இம்மையும் மறுமையும் இனிதே காக்க 39

கல்லா தொருவன் இல்லா திருக்க
கலைமகள் நீயே அருளிடு வாயே
எல்லா புகழும் உனக்கே என்று
எங்கள் இதயம் சொல்லிடும் தாயே. 40

கம்பனைத் தந்து காப்பியம் தந்து
கன்னித் தமிழை உயரவைத் தாயே
எம்பெரு மானாம் இராமன் புகழை
வையகம் அறிய வரமளித் தாயே. 41

வள்ளுவன் படைத்த திருக்குறள் மூலம்
வாழ்வின் நெறிமுறை அறிய வைத்தாயே
தெள்ளு தமிழிலே தெளிந்த நடையிலே
உள்ளம் உணர பாடவைத் தாரே. 42

இளங்கோ வடிகளின் சிலப்பதி காரம்
பன்னூ றாண்டு நிலைத்தே வாழும்
பாரதி என்றொரு மாகவி படைத்த
பிரம்ம தேவியே உன்தாள் சரணம். 43

கலைமகள் பலவும் பயின்றிட நீயும்
கடைக் கண்ணாலே அருளிடு வாயே
இயலிசை நாடகம் என்றும் வளர
இனிதாய் நீயே வரம்தரு வாயே. 44

கவிதை ஓவியம் நடனம் சமையல்
மேடை பேச்சும் இன்னிசைப் பாட்டும்
தோட்டம் அமைத்தல் வண்ணப் பூச்சு
நெசவு நீச்சல் இன்னும் பலவும். 45

வித்தைகள் அறிந்து வெற்றியை அடைந்து
உத்தமனாக உலகில் வாழ்ந்து
இனியதை பேசி இதயம் கவர்ந்து
என்றும் வாழ்ந்திட நீயருள் வாயே. 46

கற்றவர் சொல்லும் நல்லுரை கேட்டு
களங்கம் இல்லா வாழ்க்கை ஏற்று
மற்றவர் நம்மை மதித்திடும் வண்ணம்
மானுடம் வாழ வரமருள் தாயே. 47

இருளும் ஒளியும் இருக்கும் உலகில்
எதன்வழி செல்வது என்பதை அறிந்து

கருணை இரக்கம் அணிகலன் புனைந்து
தினம்தினம் வாழ திருவருள் வேண்டும். 48

போர்க்களம் தனிலே போரிடும் வீரனின்
உயிரைக் காக்கும் கவசம் போலே
தேகம் நலமுடன் நாளும் திகழ
தேவி நீயும் அருள்வாய் எமக்கு. 49

தலைமுதல் கால்வரை எல்லா உறுப்பும்
தடையற செயல்பட நீயே பொறுப்பு
பிணிகள் எம்மை தொடரா திருக்க
பேரருள் நீயே செய்வாய் தாயே. 50

அலைமகள் கலைமகள் மலைமகள் என்று
ஆயிரம் வடிவில் திகழும் சக்தி
பிழைகளை பொறுத்து நேர்வழி காட்டி
பிறந்ததின் பலனை தருவாய் நீயே. 51

உன்புகழ் பாடும் அடியார்க் கெல்லாம்
உள்ளம் மகிழ நலம்புரி வாயே
வந்தனம் சொல்லி வாழ்த்துக்கள் பாடி
வளமுடன் வாழ உனையே பணிவோம். 52

வாசலில் மாவிலை தோரணம் கட்டி
கோலம் போட்டு தீபம் ஏற்றி
வாழை இலையில் படையல் போட்டு
வணங்கிடு வோமே தாயே உன்னை. 53

தொழில்துறை சாதனம் எதுவா னாலும்
தூய்மை செய்து திலகம் இட்டு
உன்னெதிர் வைத்து இருகரம் குவித்து
உள்ளன் போடு வணங்கிடு வோமே. 54

சர்க்கரை பொங்கல் புளியோ தரையும்
எலுமிச்சை சாதம் சுண்டலும் வைத்து
அக்கறை யுடனே எங்களை காக்க
அன்னை உன்னை வேண்டிடு வோமே. 55

வெண்தா மரையும் ரோஜா மலரும்
செம்பருத்தி பூவும் மாலை தொடுத்து
அன்பாய் உனக்கு சூட்டிடு வோமே
அருள்மழை பொழிய வேண்டிடு வோமே. 56

எல்லா உயிரும் இன்புற் றிருக்க
நல்லோர் துணையும் நாளும் கிடைக்க
வல்லமை யான விதியினை தகர்க்க
வரமருள் வாயே சரஸ்வதி தாயே. 57

இசையது மீட்கும் இறைவி போற்றி
இகபர சுகம்தரும் தேவி போற்றி
அசைவதை அறியும் ஆற்றலை கொடுத்து
அரவணைப் பாயே அனுதினம் நீயே. 58

தெளிவுடன் திகழும் நதியே வாழ்க
திருவடி பணிந்தோம் தேவி வாழ்க
குலமது செழிக்க அருள்வாய் வாழ்க
திறமைகள் வளர செய்வாய் வாழ்க. 59

சரஸ்வதி தேவி பாதமே சரணம்
சகலகலா வல்லியே என்றும் சரணம்
சரணம் சரணம் நீயே சரணம்
அலைமகள் அனுதினம் அருள்வாய் சரணம். 60

Koviloor Digital Library

குமரகுருபரர் அருளிய

சகலகலா வல்லி மாலை

வெண்தா மரைக்கன்றி நின்பதந்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொ
லோ சகமேழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்
தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே
கனதனக் குன்றும் ஐம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலா வல்லியே 2

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்து உன் அருட் கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடும்கொ
லோ உளம்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலா வல்லியே 3

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக்கடலே
சகல கலா வல்லியே 4

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்
னே நெடுந்தாட் கமலத்து
அஞ்சத்துவசம் உயர்த்தோன் செந்
நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு ஒத்திருந்தாய்
சகல கலா வல்லியே 5

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்த
நல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலா வல்லியே 6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலா வல்லியே 7

சொல்விற் பனமும் அவதான
மும் கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்
வாய் நளினாசனம் சேர்
செல்விக்கு அரிதென்று ஒருகால
மும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலா வல்லியே 8

சொற்கும் பொருட்கும் உயிராம்மெஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார் நிலந்தோய் புழைக்கை
நற் குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண நடை
கற்கும் பதாமபுயத் தாயே
சகல கலா வல்லியே 9

Koviloor Digital Library



மண்கண்ட வெண் குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்டளவிற் பணியச் செய்
வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடிஉண்
டேணும் விளம்பில்உன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலா வல்லியே 10

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தின் உள்ளே
இருப்பாள் இங்கு வாரா திடர்.
படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரை போற் கையுந்- துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

– கம்பர்

அச்சிட்டோர் :
சௌமி அச்சகம், சரவணம்பட்டி. 98422 52779

Koviloor Digital Library



Koviloor Digital Library



வேந்தன்பட்டி நெய்நந்தி